## <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>

**அசல் வழக்கு எண்.** 75/2019

**வாக்குமூலம்.பி.வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆறுமுகம் | தொழில் | |
| த/பெ. | கருப்பையா | வயது | 75/ 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873–ம் வருடத்து 10–ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 28.10.2025ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என் தகப்பனார் பெயர் என்னவென்றால் கருப்பையா, சுப்பையா என இரண்டு பெயர் உண்டு. எனது தகப்பனார் பெயர் சுப்பையா என்பதற்கு என்ன ஆவணம் வைத்து இருக்கிறேன் என்றால் UDR பட்டா இருக்கிறது. நான் UDRபட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் என் தகப்பனார் பெயர் கருப்பையா என்று தான் போட்டுள்ளது என்றால் எனக்கு படிக்க தெரியாது. எனது தகப்பனார் தான் மூத்தவரா என்றால் ஆமாம். வாதிகளின் தகப்பனார் முத்தையா என் தகப்பனாருக்கு அடுத்தவர் என்றால் சரிதான். அதற்கு அடுத்தவர் காளிமுத்து என்றால் சரிதான். தாவா புலஎண். 168/5 ஆகும்.

2. தாவா சொத்துக்கு செட்டில்மெண்ட் காலத்தில் பட்டா வாதிகளின் தகப்பனார் முத்தையா அம்பலம் பெயரில் தான் கொடுத்தார்கள் என்றால் சரிதான். செட்டில்மெண்ட் பட்டாவில் என் தகப்பனார் பெயரும் மற்றொரு சகோதரரான காளிமுத்துவின் பெயரும் இல்லை என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் பட்டாவில் காளிமுத்து, கருப்பையா பெயரில் கூட்டுப்பட்டா கொடுக்கவில்லை என்றால் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார் பெயரிலான நான் சொல்லும் கூட்டு பட்டாவை தாக்கல் செய்யமுடியும். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் வழக்கு சொத்துப்பொறுத்து என் தகப்பனாருக்கோ காளிமுத்துவிற்கோ கூட்டுப்பட்டா கொடுக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. வாதி அனுபிய வழக்கறிஞர் அறிவிப்பு பி.வா.சா.ஆ.2 அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பை நான் வாங்கிக்கொண்டேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 வழககறிஞர்

அறிவிப்பு எப்படி எனக்கு கிடைத்தது என்றால் எனது தகப்பனார் கொடுத்து இருப்பார்.

4. பி.வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு என் தகப்பனாருக்கோ பாலையாவிற்கோ வாதிகள் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் இறந்து 20 வருடங்கள் இருக்கும், பி.வா.சா.ஆ.2 அறிவிப்பில் ஆறுமுகம் தந்தை பெயர் கருப்பையா அம்பலம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆறுமுகம் தகப்பனார் பெயர் கருப்பையா அம்பலம் என்பது என்னை தான் குறிக்கும் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ–2 வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கு அனுப்பியது என்றாலும் நான் வேண்டும் என்றே எனக்கு அனுப்பவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. பி.வா.சா.ஆ–3 படி எனக்கு கொடுத்த அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு கொடுத்து விட்டு தற்போது எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்படவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ–3 பதில் அறிவிப்பில் என் தகப்பனார் பெயர் சுப்பையா என்கிற கருப்பையா என்று பொய்யாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ–4 ஆதார் அட்டையிலும் என் தகப்பனார் பெயர் கருப்பையா என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் பொய்யாக நான் என் தகப்பனார் பெயர் சுப்பையா என்கிற கருப்பையா என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. நான் சொத்துக்கள் கிரையம் வாங்கி இருக்கிறேன். நான் சொத்துக்கள் கிரையம் வாங்கிய ஆவணத்தில் கருப்பையா மகன் ஆறுமுகம் என்று தான் கிரையம் வாங்கி இருக்கிறேன் என்றால் சரிதான். அந்த கிரையம் வாங்கி இடத்திற்கு என் பெயரில் பட்டா இருக்கிறது. பட்டாக்களில் என் பெயர் கருப்பையா மகன் ஆறுமுகம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.அதனால் என் தகப்பனார் பெயர் கருப்பையா என்பது தான் உண்மை என்றாலும் நான் பொய்யாக சுப்பையா என்கிற கருப்பையா என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ–5 குடும்ப அட்டையில் என் தகப்பனார் பெயர் கருப்பையா என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தகப்பனார் பெயர் கருப்பையா தான் என்றாலும் சுப்பையா என்கிற கருப்பையா என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. என் தகப்பனார் எந்த வருடம் சிலோன் சென்றார் என்பது தெரியாது. என் தகப்பனார் 1980ஆம் வருடம் இந்தியாவிற்கு திரும்ப வந்தார். என் தகப்பனார் இலங்கையில் கொடுத்த இந்திய அகதிகள் பாஸ்போர்ட்டில் வந்தார். அந்த பாஸ்போர்ட் தற்போது எங்கு இருக்கிறது என்று எனக்கு தெரியாது. கடவு சீட்டில் என் தகப்பனார் இலங்கைக்கு சென்ற ஆண்டும் மீண்டும் இந்தியா வந்த ஆண்டும் குறிப்பிடப்பட்டு இருப்பதால் அதை மறைக்க பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது வழக்கு 3 செண்ட் இடம் மற்றும் அதில் உள்ள ஓட்டுவீட்டிற்கு தான் வழக்குப்போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் அந்த வீடு அவர்களுடையது இல்லை. வழக்கு சொத்தில் உள்ள ஓட்டுவீட்டிற்கு வாதிகளின்

தகப்பனார் முத்தையாஅம்பலம் பெயரில் தான் வீட்டுவரி ரசீது இருக்கிறது என்றால் சரியல்ல.

8. மேற்படி வீட்டிற்கு என் பெயரில் ரசீது இருக்கிறதா என்றால் இல்லை. என் அப்பா பெயரில் தான் இருக்கிறது. அந்த ஆவணத்தை என்னால் தாக்கல் செய்யமுடியும். என் தகப்பனார் பெயரில் வீட்டு வரி ரசீது கிடையாது என்றாலும் இருந்து இருந்தால் நான் அதை தாக்கல் செய்து இருப்பேன் என்றால் சரியல்ல. எனக்கு சொந்தமான வீடு எனது மகன் வேறு புலஎண்ணில் கட்டியுள்ளார். அந்த புலஎண் தெரியாது. நான் தாவா சொத்தில் தான் இருக்கிறேன். சில நாள் மகன் வீட்டில் இருப்பேன். நான் தாவா சொத்து உள்ள வீட்டில் குடியிருக்கவில்லை என்றாலும் தனியாக வீடு கட்டிபோய்விட்டேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு எப்படி பாத்தியம் என்றால் எனது அப்பா உடன் முத்தையா, காளிமுத்து உடன்பிறந்ததால் எனக்கு சொந்தம். தாவா சொத்து வாதிகளின் தகப்பனார் முத்தையா அம்பலத்திற்கு மட்டும் பாத்தியப்பட்ட சொத்து என்றாலும் உடன்பிறந்ததால் என் தகப்பனாருக்கு சொந்தம் என்று சொல்வது தவறு என்றாலும் சரியல்ல.

9. எனக்கு பூர்வீகம் ரெத்தினக்கோட்டை கிராமம் இல்லை என்றாலும் மேல்மங்கலம் கிராமம் தான் பூர்வீகம் என்றால் சரியல்ல. மேல்மங்கலம் கிராமத்திற்கு அருகில் கிடங்கிவயல் என்ற ஊரும் அதில் ஒரு அய்யனார் கோவிலும் இருக்கிறது என்றால் சரிதான். அந்த கோவிலுக்கு எங்கள் குடும்பத்தினர் பரம்பரை பூசாரி என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக கிடங்கிவயல் கோவிலில் உள்ள உரிமையை மறுக்கிறேன் என்றால் சரியல்ல. மேல்மங்கலம் கிராமத்தில் என் தகப்பனார் கருப்பையா அவரது சகோதரர்கள் முத்தையா, காளிமுத்து ஆகியோர். சொத்துக்களை விற்று இருக்கிறார்களா என்றால் விற்று இருக்கிறார்கள் ஆனால் அது குப்பம்மாள் சொத்துக்கள் ஆகும். நான் சொல்வது தவறு என்றாலும் மேல்மங்கல கிராம சொத்துக்கள் குப்பம்மாள் சொத்துக்கள் கிடையாது என்றாலும் தகப்பன் வழி சொத்துக்கள் என்றால் சரியல்ல.

10. குப்பம்மாள் சொத்தை தான் விற்றதை காட்ட அந்த ஆவணங்கள் தாக்கல் செய்யமுடியுமா என்றால் என்னிடம் ஆவணங்கள் இல்லை. நகல் போட்டு எடுக்க எனக்கு வசதி இல்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அந்த ஆவணங்களை தாக்கல் செய்தால் மேல்மங்கல கிராம சொத்துக்கள் என் தகப்பன் வழி சொத்துக்கள் என்பது தெரிந்துவிடும் என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**